இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 14 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 07 – திங்கள்கிழமை 24 ஆகஸ்ட் 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 14 : Thiruvalluvar Year - 2057 - Aavani 07 - Monday 24 August 2026 - Madurai 8 Pages ₹ 5.00



தஞ்சை தெற்கு மாவட்டக் கழகத் தோழர் வி.கே.வெங்கடேசன் இல்ல மணவிழாவில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரை நிகழ்த்தினார்.

## பேரவையில் எதிர்க்கட்சிகளின் எந்தக் கேள்விகளுக்கும் பதிலளிக்காத

# முதலமைச்சரின் ஆணவத்திற்கு மக்கள் சரியான பாடம் புகட்டுவர்!

## பட்டுக்கோட்டை வி.கே.வெங்கடேசன் இல்ல மணவிழாவில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் எச்சரிக்கை!

**பட்டுக்கோட்டை, ஆக. 24 -**

**“பேரவையில் எதிர்க்கட்சிகளின் எந்தக் கேள்விகளுக்கும் பதிலளிக்காத முதலமைச்சரின் ஆணவத்திற்கு மக்கள் ஒரு சரியான பாடத்தைப் புகட்டுவார்கள்” என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பட்டுக்கோட்டையில் கழகத் தோழர் வி.கே.வெங்கடேசன் இல்ல மணவிழாவை நடத்தி வைத்து, உரையாற்றும்போது எச்சரிக்கை விடுத்தார்.**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில், கழகத்தோழர் வி.கே.வெங்கடேசன் – ஸ்ரீதேவி ஆகியோரின் அன்புமகன் ராம்பிரசாத், எம்.எஸ்.விஸ்வநாதன் – சீதாலட்சுமி ஆகியோரின் அன்புமகள் நந்தினி என்கிற கற்பகவள்ளி ஆகியோரின் திருமணத்தை, கழக இளைஞர் அணிச் செயலாளரும், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் நடத்திவைத்து வாழ்த்துரை வழங்கினார்.

மணவிழாவில் கலந்துகொண்டு, கழக இளைஞர் அணிச் செயலாளரும், சட்டப்பேரவைத் எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசிய தாவது:-

இன்றைக்கு நம் அண்ணன் வி.கே. வெங்கடேசன் – ஸ்ரீதேவி ஆகியோரின் அன்பு மகன் சகோதரர் ராம்பிரசாத், எம்.எஸ்.விஸ்வநாதன் – சீதாலட்சுமி ஆகியோரின் அன்புமகள் சகோதரி நந்தினி என்கிற கற்பகவள்ளி ஆகியோரின் திருமணத்தை, பட்டுக்கோட்டையில் உங்கள் முன்னிலையில் நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

முதலில் மணமக்களுக்கு நம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம். மணமகனின் தந்தையார் அண்ணன் வி.கே.வெங்கடேசன் அவர்களின் திருமணத்தை நம் இனமானப் பேராசிரியர் தாத்தா அவர்கள்தான் நடத்தி வைத்தார். இன்றைக்கு அண்ணன் வெங்கடேசன் அவர்கள் மகனின் திருமணத்தை நான் நடத்தி வைக்கின்ற வாய்ப்பை பெற்றுள்ளேன். இந்த வாய்ப்புக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அண்ணன் வெங்கடேசன் அவர்களின் குடும்பத்தைப் பொறுத்தவரைக்கும் அவரின் தந்தை மறைந்த தோழர் அய்யா கலியமூர்த்தி அவர்கள் பொதுவாழ்வு இயக்கமான கம்யூனிஸ்ட் இயக்கத்தில் மிகச் சிறப்பாகப் பணியாற்றியவர். ஆனால், வெங்கடேசன் அவர்கள் நம் தலைவர் அவர்களால் ஈர்க்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். பல்வேறு பொறுப்புகளில் இருந்திருக்கிறார்.

இந்தத் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் எனக்கென்ன பெருமை என்றால், அண்ணன் வெங்கடேசன் அவர்கள் எங்கள் இளைஞர் அணியின் கண்டுபிடிப்பு.

முதலில் அவர் இளைஞர் அணியில் பணியாற்றிக் கொண்டிருந்தாலும், அதன் பிறகு, பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி, இன்று சிறப்பாக கழகப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்தான் அண்ணன் வெங்கடேசன் அவர்கள். போராட்டங்களில் கலந்து கொண்டது மட்டுமல்லாமல், கைதாகி சிறை சென்று வந்தவர், அந்த அனுபவத்துக்கும் சொந்தக்காரர்தான் அண்ணன் வெங்கடேசன் அவர்கள். அப்படிப்பட்ட அண்ணன் வெங்கடேசன் அவர்களின் இல்லத் திருமண விழாவில், கலந்து கொள்வது எனக்கு மிகுந்த பெருமையைத் தருகிறது.

கடந்த சில மாதங்களாகவே இந்த தஞ்சாவூர் மாவட்டத்துக்கு அடிக்கடி வந்து கொண்டிருக்கிறேன். கடந்த மூன்று மாதங்களில், நான்கு முறை வருகை தந்துள்ளேன். அப்படியே நான் வரவில்லை என்றாலும், இந்த அரசு என்னைக் கைது செய்து, அவர்களே இந்த தஞ்சாவூர் மாவட்டத்துக்கு அழைத்து வருகிறார்கள்.

இரண்டு வாரங்களுக்குள் மூன்று முறை வந்துவிட்டேன். கடந்த 3ஆம் தேதி என்ன நடந்தது என்பதை, நீங்கள் அனைவரும் பாத்திருப்பீர்கள். தமிழ்நாட்டில் எங்கு பேசினாலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் பேசும்போது மிகவும் ஜாக்கிரதையாகப் பேசவேண்டும். நாம் பேசவில்லை என்றாலும், பரவாயில்லை, கீழே இருந்து பேசி, நம்மை மாட்டிவிட்டுவிடுவார்கள்.

இன்றைக்கு அந்தமாதிரி அண்ணன் துரை.சந்திரசேகரன் அவர்கள் சில வார்த்தைகளைக் கூறி, என்னை மாட்டி விட்டிருக்கிறார். அதற்கும் நான்தான்

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

## ஒன்றிய பா.ஜ.க. அரசின் ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’!

# சட்டப்பேரவைகளை முன்கூட்டியே கலைக்க முடிவு!

## பா.ஜ.க. தீவிர ஆலோசனை!

*புதுடெல்லி, ஆக. 24 -*

‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ திட்டத்தை 2029 ஆம் ஆண்டிலேயே அமல்படுத்தும் வகையில் தங்களது கூட்டணி ஆளும் 22 மாநிலங்களின் சட்டப்பேரவைகளை முன்கூட்டியே கலைப்பது குறித்து பா.ஜ.க. தீவிரமாக ஆலோசித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ மசோதாவை ஆய்வு செய்து வரும் நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கும் காலக்கெடு, நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரின் கடைசி வாரம் வரை நீட்டிக்கப் பட்டுள்ளது.

‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ திட்டம் நாட்டின் கூட்டாட்சி முறைக்கும், ஜனநாயகத்திற்கும் எதிரானது என தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன.

இத்திட்டத்தை நாடு முழுவதும் சட்டப்பூர்வமாக கொண்டுவர, அரசியலமைப்பின் 83 மற்றும் 172 ஆகிய பிரிவுகள் உட்பட மொத்தம் 18 திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவை.

தற்போதையை நிலையில், ஒரே நேர தேர்தல் முறை 2034 இல் தான் முழுமையாக அமலுக்கு கொண்டு வர முடியும்.

இந்நிலையில் பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் ஆளும் 22 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் ஆட்சிக் காலம் முடிவதற்கு முன்பே அவற்றை கலைத்துவிட்டு, 2029 மக்களவைத் தேர்தலுடன் மாநில சட்டமன்றத் தேர்தல்களையும் இணைத்து நடத்த பா.ஜ.க. ஆலோசித்து வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த 22 மாநிலங்களில், அடுத்த இரண்டு ஆண்டுகளில் 11 மாநிலங்களுக்கு தேர்தல் வரவிருக்கிறது. மீதமுள்ள மாநிலங்களின் ஆயுட்காலம் 2029க்கு பிறகும் நீடிப்பதால், அவற்றை முன்கூட்டியே கலைக்க வேண்டியிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## ஆவின் கூட்டுறவு சங்கங்களுக்கு

# இன்று முதல் பால் விநியோகம் நிறுத்தம்!

## பால் உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவிப்பு!

*சென்னை, ஆக. 24 -*

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கம் மற்றும் விவசாயிகள் அமைப்புகள் இன்று முதல் ஆவின் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் விநியோகத்தை நிறுத்தப் போவதாக அறிவித்துள்ளன.

அண்மையில் தமிழக அரசு பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு 3 ரூபாய் உயர்த்தி அறிவித்தது. இந்த விலை உயர்வு மிகக் குறைவானது என்றும், ஏமாற்றம் அளிப்பதாகவும் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மாட்டுத் தீவனம் மற்றும் பராமரிப்புக்கான செலவுகள் உயர்ந்துள்ளதால், பசுவின் பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு 44 ரூபாய் ஆகவும், எருமைப் பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு 60 ரூபாய் ஆகவும் உயர்த்த வேண்டும் என்றும் விவசாயிகள் கோரி வருகின்றனர்.

இந்நிலையில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கம் மற்றும் விவசாயிகள் அமைப்புகள் இன்று முதல் ஆவின் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் விநியோகத்தை நிறுத்தப் போவதாக அறிவித்துள்ளனர்.

பால் உற்பத்தியாளர்களின் இந்த போராட்டத்தால், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆவின் பால் தட்டுப்பாடு உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.